## 01. அறிமுகம்

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். இந்த அங்கத்தவர்களில் ஒருவர் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் தவிசாளராக நியமிக்கப்படுவார். 2014.07.01 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பதவிக்காலம் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமுலுக்கு வந்த பின்பு 2015.10.15 ஆம் திகதி புதிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதை தொடர்ந்து முடிவடைந்தது. அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2016 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2016 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக தயாரிக்கப்படுகின்ற இந்த அறிக்கையை அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றது.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை

இலங்கை பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த போது 1946 மே மாதம் 15 ஆம் திகதி இலங்கை (அரசியலமைப்பு) அரச பேரவைக் கட்டளையின் மூலம் முதலாவது அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இதற்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அதுவரை இருபத்தாறு வருட காலமாக இயங்கி வந்த அரசாங்க சேவை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டு, அரசாங்க சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு மீண்டும் நிறுவப்பட்டது. அந்த ஆணைக்குழு மேன்முறையீட்டு அதிகாரியாக மாத்திரம் செயற்பட்டது. 1992 ஆம் ஆண்டில் அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு மேலுள்ள பதவிகள் தவிர்ந்த) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதற்கிணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவினால் அல்லது அதன் மூலம் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட குழுவொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும் தத்துவங்கள் அமைச்சரவையினால் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளப்பட்டன.

2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை தொடர்பாக அதுவரையும் இருந்து வந்த IX அத்தியாயம் நீக்கப்பட்டு புதிய அத்தியாயமொன்று சேர்க்கப்பட்டது. அதற்கிணங்க, அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற 09 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இத்திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிலை பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது. அதற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்குரிய நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை என்பன தொடர்பில் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டன. மேலும் இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு வகை சொல்வதற்கும் பதில் கூறுவதற்கும் கட்டுப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபிதம் மற்றும் அதன் பணிகளுடனும் தொடர்புடைய விடயங்கள் திருத்தப்பட்டன. இந்த ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டிய ஆணைக்குழுவாகும். 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தியோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இவர்கள் மூன்று வருட காலப்பகுதிக்கு தமது பதவியை வகிப்பதுடன் தொடர்ந்தும் அவ்வாறனதொரு காலப்பகுதிக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான 55(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான சகல கொள்கை ரீதியான விடயங்களுக்கும் அமைச்சரவையினால் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு

மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. அவர்களுள் ஆகக் குறைந்தது மூவர் பதினைந்து வருடங்களுக்கு மேல் அரசாங்க உத்தயோகத்தர்களாக கடமையாற்றி அனுபவம் பெற்றவர்களாக இருப்பர். சனாதிபதி அவர்களினால் அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் தொடர்பாக செயலாற்றுவதற்கான தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 57(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கல்விச் சேவைக்குழுவும் சுகாதார சேவைக்குழுவும் தாபிக்கப்பட்டுள்ளது.

## 03. <u>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள்</u>

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தரைப்படை, கடற்படை, விமானப் படை அங்கத்தவர்கள் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்ரொருவர் அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரொருவர் அல்லது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தரொருவர் அல்லது கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு சேவை உத்தியோகத்தரொருவர் அல்லது மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் நியமிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள், சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்படும் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்கக் கம்பனிகள் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தவிர்ந்த மாகாண சபைகளில் பணியாற்றும் நாடு முழுவதற்குமான சேவைக்குரிய உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும்,

- நியமனம்
- பதவியுயர்வு
- இடமாற்றம்
- ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளித்தலுக்கு அமைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 6/2006

இல் பொருள்கோடப்பட்டுள்ள (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் தவிர்ந்த) மூன்றாம் நிலை அதியுயர் தர மற்றும் விசேட தர உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய சகல உத்தியோகத்தர்களும் ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை சகல உத்தியோகத்தர்களினதும் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான அதிகாரங்கள் அமைச்சுச் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கும் கையளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவையின் சகல உத்தியோகத்தர்களினதும் தாபன விதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் திணைக்களத் தலைவர்களுக்கு அல்லது அமைச்சு செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இல 1992/07 மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1989/29 மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள கல்வித்துறை சார்ந்த உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை நிரந்தரமாக்கல், பதவி உயர்வு, இடமாற்றம், சேவையை முடிவுறுத்தல், பதவி விலகல், ஓய்வுபெறுகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் போன்ற பணிகளும் அத்தோடு சேவை வெறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக பரிசீலனை செய்தல், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான அதிகாரங்கள் கல்விச் சேவைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இல 1994/24 மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள சுகாதாரத்துறை சார்ந்த உத்தியோகத்தர்களின் நியமனம், சேவை நிரந்தமாக்கல், பதவி உயர்வு, இடமாற்றம், சேவையை முடிவுறுத்தல், பதவி விலகல், ஓய்வுபெறுகை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் போன்ற பணிகளும் அத்தோடு சேவை வெறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக பரிசீலனை செய்தல், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல் மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான அதிகாரங்கள் சுகாதார சேவைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆயினும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் அதிகாரக் கையளிப்புக்கு ஏற்புடைய விடயப் பரப்பு தொடர்பாகவோ அல்லது அந்த ஆணைக்குழுவினால் அவ்வாறு செய்யப்பட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவோ ஏற்படக்கூடிய நிச்சயமற்ற நிலமையின் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகவும் அறுதியானதாகவும் இருத்தல் வேண்டும்.

## 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் பிரிவுகளுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

மேற்படி இல 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார கையளிப்புக்கு அமைய ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு.

அரசாங்க சேவையிலுள்ள சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் தயாரிக்கும் பணி தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய சேவை பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரிக்கின்ற போது அங்கீகரிக்கப்பட்ட சகல பதவிகளுக்கும் அலுவலர்களை ஆட்சேர்க்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஆட்சேர்ப்பு முறைகள், ஆட்சேர்ப்பு தகைமைகள், பதவிக்கான சம்பள அளவுத்திட்டம், சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைகள், பதவிகளுக்கு நியமிக்கும் முறைகள் மற்றும் பிற அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஏற்புடைய சேவை பிரமாணக் குறிப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை அனுமதிப்பதற்கு முன்னர் பதவிகளை அங்கீகரித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியும் சம்பள அளவுத்திட்டங்கள் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அத்தோடு சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவுக்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக தாபனப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்கு உட்பட்ட அதிகாரங்கள் கையளிப்பு தொடர்பான நடவடிக்கைகள்
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுறுத்தல் கோவைகளை தயாரித்தல்
- சகல சேவைகளுக்குமான இடமாற்ற நடைமுறைகள் தயாரித்தல்
- அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பொன்றை, ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை அல்லது இடமாற்ற நடைமுறை ஒன்றை திருத்துவதற்கு தேவை ஏற்படின் ஏற்புடைய செயலாளரின் சிபாரிசுக்கு அமைய அந்த சேவை பிரமாணக் குறிப்பை அல்லது நடைமுறையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
- அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் செய்யப்படும் நியமனங்கள், பதவியுயர்வுகள் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கோரி அனுப்பப்படும் வேண்டுகோள்களுக்கு கொள்கைத் தீர்மானங்களை வழங்குதல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகள், சேவை பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் கட்டளைகளுக்கு அப்பால் செயற்படவேண்டிய

சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல்.

மேற்படி இல 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார கையளிப்புக்கு அமைய ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் நியமனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள்/ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல்,
- சேவையில் நிரந்தரமாக்கல்,
- சேவையை முடிவுறுத்தல்,
- முதலில் வகித்த பதவிக்கு மீள நியமித்தல்,
- பதில் கடமை /கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல்,
- சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர/தற்காலிக அடிப்படையில்),
- ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்,
- சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல்,
- சேவைக்கு/பதவிக்கு மீள நியமித்தல்,
- ஓய்வுபெறச் செய்தல் (30/88 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விருப்புத் தெரிவு / கட்டாய / மருத்துவக் காரணிகளின் அடிப்படையில்),
- ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல்,
- நியமனப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பாக நியாய சபையின் முன் ஆஜராகுதல்,
- உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேற்படி விடயங்களுக்காக செய்யப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகள் / சிபாரிசுகளை முன்வைத்தல்,
- பொதுமனுக்குழுவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுக்கு ஏற்புடைய முறைப்பாடுகள் தொடர்பில் அக்குழுவின் முன் தோற்றுதல்,
- நிர்வாக விடயங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் பிரிவுக்கு ஏற்புடைய முறைப்பாடுகள் தொடர்பில் அவதானிப்புரைகள் / சிபாரிசுகளை வழங்குதல்.

மேற்படி இல 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார கையளிப்புக்கு அமைய ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் பதவி உயர்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள்/ ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் பதவி உயர்வு வழங்குதல் (ஒரு தரத்திலிரந்து இன்னுமொரு தரத்திற்கு / சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் )

- சேவைப் பிரமாணக்குறிப்புக்ளில் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு நியமித்தல்
- பொதுமனுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அவதானிப்புரைகள் வழங்குதல் மற்றும் அவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அக்குழுவின் முன் தோற்றுதல்,
- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் அவதானிப்புரைகள் சமர்ப்பித்தல் மற்றும் அந்த மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பாக நியாய சபையின் முன் ஆஜராகுதல்,
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செய்யப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புரைகள் / சிபாரிசுகளை முன்வைத்தல்,

மேற்படி இல 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகார கையளிப்புக்கு அமைய ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தவிர்ந்த ஏனைய சகல ஒழுக்காற்று நடவடிக்கைகளும் ஒழுக்காற்றுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவர் அல்லது குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆரம்ப விசாரணையொன்றின் அறிக்கை அமைச்சுச் செயலாளர் ஊடாக அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளுடன் கிடைக்கப்பெற்ற பின்னர் குற்றப்பத்திரமொன்றை வழங்குதல் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையை நிறைவுசெய்தல்.
- வழங்கப்பட்ட குற்றப்பத்திரத்திற்கான பதிலைப் பெற்று தண்டனை விதித்தல், முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துதல் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையை நிறைவுசெய்தல்.
- முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் அறிக்கை கிடைத்த பின்னர் தண்டனை விதித்தல் அல்லது குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்தல்.
- உத்தியோகத்தரை பணித்தடை செய்தல், கட்டாய லீவில் அனுப்புதல் மற்றும் உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல்.
- நிறைவுறா ஒழுக்காற்று விடயங்கள் இருக்குமிடத்து ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 பிரிவுக்கு அமைய உத்தியோகத்தர்களை ஓய்வுபெறுவித்தல்.
- பதவி வெறிதாக்கல் கட்டளைகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளல்.
- உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை,மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற பொதுமனுக்குழு மற்றும் ஒம்புஸ்மனிடம் முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக அவதானிப்புரைகள் தயாரித்தல் மற்றும் அழைப்பு விடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அங்கு ஆஜராகுதல்.

2016.02.25 ஆம் திகதிய 1955/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட 1941/41 ஆம் இலக்க 2015.11.20 ஆம் திகதிய அதிவிசேட

வர்த்தமான அறிவித்தல் மூலம் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் வழங்கப்படுகின்ற கட்டளை தொடர்பில் அதிருப்திக்குள்ளான அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் மேன்முறையீடு ஒன்றினை சமர்ப்பிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறான மேன்முறையீடொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அது தொடர்பாக மேன்முறையீட்டுப் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பாகவும் ஏற்புடைய அமைச்சு/ திணைக்களத்திலிருந்து அவதானிப்புக்களும் சிபாரிசுகளும் வேண்டப்படும்.
- அதன் பின்னர் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பாகவும் விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்.
- மேன்முறையீடு தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானத்தை மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய தரப்பினருக்கும் அறிவித்தல்.
- மேன்முறையீடு தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானத்துக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பாக அவதானிப்பு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அந்த மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பாக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் முன் ஆஜராகுதல்.
- பொது மனுக்குழுவால் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது குழுவின் முன் தோற்றுதல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் / சிபாரிசுகள் முன்வைத்தல்.

## 3.2 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழ் காணும் சந்தர்ப்பங்கள் தவிர ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

- அரசியலமைப்பின் 61 அ உறுப்புரையின் பிரகாரம் 126 ஆவது உறுப்புரையின் (1), (2), (3), (4), (5) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அடிப்படை உரிமை சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருதல்.
- அரசிலமைப்பின் 59(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

## 04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்கு நியமனம் வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்குமுரிய விசேட கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மையுடன் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் உரிய தருணத்தில் ஆட்சேர்ப்புக்களை செய்வதனூடாக அரசாங்க சேவை தற்போது வேண்டி நிற்கின்ற கல்வி அறிவு, திறமை மற்றும் சிறந்த உளப்பாங்குகள் கொண்ட இளைய சமுதாயத்தை அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தரத்திலான சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு முடிந்துள்ளது.

ISO 9001:2008 சர்வதேச தர நியமங்களின் அடிப்படையில் முகாமைத்துவ கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. அதன் நிமித்தம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த தர முகாமைத்துவ கட்டமைப்பில் தொடர்ந்தேர்ச்சியான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனூடாக ஏற்புடைய செயன்முறைக்கு கால நிர்ணயம் மற்றும் வேலைப் படிமுறை வழங்கப்பட்டிருப்பதனால் நியாயமான ஒரு காலப்பிரிவுக்குள் மிகவும் முறையாகவும் சரியாகவும் பணிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சேவைப் பெறுநர் பட்டயமொன்று தயாரிக்கப்பட்டு செயற்பாடுகளுக்கான இலக்கிடப்பட்ட காலப்பிரிவு வழங்கப்பட்டுள்ளதனால் வினைத்திறன் மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடத்திலும் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக செயலாளர்களை அழைத்து கடந்த வருடம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக மீளாய்வு செய்து செயற்பாடுகளை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட ஒரு காலப்பிரிவுக்குள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்ட காரணத்தினால் சிறந்த வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க முடிந்தது.

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்து சேவையை எதிர்பார்த்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு துரிதமான சேவையை வழங்கும் பொருட்டு முறையான நினைவூட்டல்களை வழங்கி மற்றும் கடிதத் தொடர்புகளை குறைத்து கலந்துரையாடல்களை நடாத்தி செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 க்கு அமைய திருத்தியமைக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் உரிய முறைப்படி நடைப்பெறாத காரணத்தினால் பாதிப்புக்கு உள்ளாகும் உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு தேவையான நடைமுறையை

முறைமைப்படுத்தி அதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரத்தை பரவலாக்கி தாமதமின்றி வினைத்திறன்காண் தடைதாண்டல் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

நியமிப்பு மற்றும் பதவி உயர்வுக்கான சகல ஆவணங்களும் ஒரே தடவையில் பூரணப்படுத்தி முன்வைக்காத காரணத்தினால் ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மூலம் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள மாதிரிப் படிவங்கள் மற்றும் பரிசீலனைப் பட்டியல்கள் தொடர்பாக மீண்டும் அறிவூட்டியதனூடாகவும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன.

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்கு பதவி உயர்வு வழங்கும் போது ஒவ்வொரு சேவைக்குமுரிய விசேட கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்டு ஏற்புடைய பதவி உயர்வுத் திட்டங்களுக்கு அமைவாக வெளிப்படைத்தன்மையுடன் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தாமதமின்றி பதவி உயர்வுகள் வழங்குவதனூடாக அரசாங்க உத்தியோகத்தர்களிடத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தி தரமான மற்றும் பயனுள்ள அரசாங்க சேவையைப் பேணிவர முடிந்துள்ளது.

மேலதிக செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், பிரதான கணக்காளர் மற்றும் அதையொத்த மற்றும் அதற்குச் சமனான பதவிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும் நியமனங்கள் அல்லது அந்த பதவிகளிலிருந்து உத்தியோகத்தர்களை நீக்கி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தழுவல் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளையும் மற்றும் பாதிப்புக்களையும் தவிர்ப்பதற்காக வேண்டி அவ்வாறான நியமனங்களை மேற்கொள்ளும் போது முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கியதன் மூலம் ஏற்புடைய நியமனங்களை முறைப்படுத்த முடிந்தது.

அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் வழங்கப்படுகின்ற கட்டளை தொடர்பில் அதிருப்திக்குள்ளான அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் மேன்முறையீடு தொடர்பாக காணப்படும் சட்ட ரீதியான ஏற்பாட்டின் கீழ் நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானத்தை வழங்குவதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நியாயமான மேன்முறையீட்டை சமர்ப்பிப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் பல்வேறு இனங்களை சேர்ந்த மற்றும் பல்வேறுபட்ட மதங்களைப் பின்பற்றும் உத்தியோகத்தர்கள் கடமைப்புரிகின்றனர். இனங்களுக்கு மத்தியில் நல்லுறவையும் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் சிங்கள தமிழ் புத்தாண்டு கொண்டாட்டமும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு மத போதனையும் நிகழ்த்தப்பட்டது. அத்தோடு ரமலான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு மௌலவி ஒருவரால் உரையொன்றும், தீபாவளி உற்சவத்திற்காக

இந்துமத போதகர் ஒருவரைக் கொண்டு பூஜை வழிபாடும், நத்தார் பண்டிகையை முன்னிட்டு கிருஸ்தவ பாதிரி ஒருவரால் உரையொன்றும் நிகழ்த்தப்பட்டன. அத்தோடு மேலும் சகல உத்தியோகத்தர்களினதும் நலன்புரிக்காக வருடாந்த சுற்றுலா மற்றும் உத்தியோகத்தர்களின் கலை ஆற்றல்களை மேடையேற்றும் பாட்டுக்கச்சேரி “கீகொனுவ” இம்முறையும் வெகு விமர்சையாக நடைப்பெற்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரிய பத்தரமுல்லையில் அமைந்துள்ள புதிய அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2014 சனவரி மாதம் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அந்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் மூன்று (03) வருட ஒப்பந்தக் காலத்தின் பின்னர் 2017.06.22 ஆம திகதி நிர்மாணப் பணிளை பூர்தி செய்து ஒப்படைக்கப்படவுள்ளது. இந்த நிர்மாணப் பணிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 432,335,423/- ஆகும். 2016.12.31 ஆம் திகதியளவில் ரூ.289,024,687.97 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் ஏற்புடைய நிர்மாணப் பணிகள் இது வரையில் நிறைவுசெய்யப்படாத காரணத்தினாலும் விலைப் பட்டியல்கள் உரிய முறையில் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படாத காரணத்தினாலும் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.

சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரசாங்க / சிவில் சேவை ஆணைக்குழுக்களினது தலைவர்களது கூட்டத் தொடரின் 5 ஆவது கூட்டம் 2016 மார்ச் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 2016.03.30 ஆம் திகதி வரை பூட்டானில் திம்பு நகரில் சகல அங்கத்துவ நாடுகளின் பங்கேற்புடனும் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சார்பில் அதன் தவிசாளர் திரு. டீ.திஸாநாயக்க அவர்களும் செயலாளர் திரு. எச்.எம்.காமினி செனெவிரத்தன அவர்களும் கலந்துகொண்டனர்.

## 4.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகளை மேற்கொள்ளும் போது முகம்கொடுக்க நேரிட்ட சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரித்தல், நியமனம், பதவி உயர்வு, ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கும் போது பல்வேறுபட்ட உத்தியோகபூர்வ பிரச்சினைகள் எழுகின்ற காரணத்தினால் ஏற்படும் தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனங்களது உத்தியோகத்தர்களுடன் தேவையான சந்தர்ப்பங்களில் கூட்டங்களை நடாத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் துரிதமாக பதிலைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு நினைவூட்டல்களை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களை அனுமதிப்பதற்கு மற்றும் திருத்துவதற்கு முன்வைக்கும் போது அனுப்பப்படும் வன் பிரதிகளில் மேலும் திருத்தங்களை செய்ய வேண்டியிருப்பின் மீண்டும் முழுமையாக ஆட்சேர்ப்புத் திட்டத்தை அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பை தட்டச்சு செய்ய வேண்டி ஏற்படுவதால் ஏற்புடைய அமைச்சுக்கள் / திணைக்களங்களிலிருந்து மென் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மிகவும் வினைத்திறனுடன் அந்த ஆவணங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அத்தோடு அனுமதிக்கப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப்

பிரமாணக் குறிப்புக்களை மின்னஞ்சல் வழியாக ஏற்புடைய அமைச்சு / திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவில் நீண்டகாலம் சேவையாற்றி அனுபவம் பெற்றிருந்த பல உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற காரணத்தினால் புதிதாக நியமனம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்கு அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சில காலங்கள் தேவைப்படுவதனால் அவர்களுக்கு பயிற்சியளித்து பின்னூட்டம் செய்வதனூடாக தேவையான சேவையை வினைத்திறனுள்ள வகையில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு போதிய அறிவு இல்லாத காரணத்தினால் ஒழுக்காற்று செயன்முறையை வினைத்திறனுடன் முன்னெடுப்பதில் சிக்கல் நிலமை காணப்பட்டது. அதற்கு தீர்வாக ஒழுக்காற்று செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக்கும் நோக்கில் இந்த வருடத்தில் ஒழுக்காற்று வழிகாட்டல் கோவையை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

## 05. மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு பின்வரும் பிரிவுகளினால் தேவையான பங்களிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

- தாபனப் பிரிவு
- நியமனப் பிரிவு
- பதவியுயர்வுப் பிரிவு
- ஒழுக்காற்றுப் பிரிவு
- மேன்முறையீட்டுப் பிரிவு
- நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- கல்விச் சேவைக் குழு
- சுகாதார சேவைக் குழு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு

## 5.1 தாபனப் பிரிவு

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு இணங்க, அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றையும் அந்த சேவைக்கு வெளியே அனுமதிக்கப்படும் சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றையும் தயாரிக்கும் பணி தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றை தயாரிக்கின்ற போது அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஆட்சேர்ப்பு முறை, ஆட்சேர்ப்புக்கான தகைமைகள், பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம், சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைகள் மற்றும் ஏற்புடைய ஏனைய சகல விடயங்களும் உள்ளடக்கப்படும். ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முன்னர் பதவிகள் அனுமதித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவை பணிப்பாளரின் அனுமதியும் சம்பள அளவுத்திட்டம் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசும் சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவுக்கு தாபனப் பணிப்பாளரின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

### 5.1.1 தாபனப் பிரிவின் செயற்பாடுகள்

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குரிய அதிகாரங்கள், பொறுப்புகள், தத்துவங்கள் என்பவற்றைக் கையளிப்பது தொடர்பான செயற்பாடுகள்.
- அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை தயாரித்தல்.
- அந்த சேவைக்கு வெளியே அனுமதிக்கப்படும் சகல பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்தல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளை வகுத்தல், திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுதல்.
- அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்கும் இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தல்.
- அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பை, ஆட்சேர்ப்புத் திட்டத்தை அல்லது இடமாற்ற நடைமுறையை திருத்த உத்தேசிக்கும் போது ஏற்புடைய செயலாளரின் சிபாரிசுக்கு அமைய அந்த சேவை பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தை திருத்தி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் செய்யப்படும் நியமிப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக கொள்கை தீர்மானங்களை வழங்குதல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள்

சுற்றறிக்கைகள், கட்டளைகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டு செயற்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

- அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள், கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை வெளியிடல்.

### 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்றம் - (2016.01.01 - 2016.12.31)

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் கீழ்க் காணும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 79 |
| 2 | புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் | 02 |
| 3 | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் திருத்தம் | 61 |
| 4 | சேவைப் பிரமாணக் குறிப்புகள் திருத்தம் | 38 |
| 5 | இடமாற்ற நடைமுறைகள் | 11 |
| 6 | இடமாற்ற நடைமுறைகள் திருத்தம் | 10 |
| 7 | ஆட்சேர்ப்புத் திட்டங்களில் மற்றும் சேவை பிரமாணக் குறிப்புகளில் திருத்தங்களை மேற்கொள்ளல். | 11 |
| 8 | சுற்றறிக்கைகள் | 04 |
| 9 | விசேட சந்தர்ப்பங்களின் போது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 20 |
| 10 | விசேட சந்தர்ப்பங்களின் போது சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 12 |
| 11 | விசேட சந்தர்ப்பங்களின் போது இடமாற்ற நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 03 |
| 12 | அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதிகளுடன் தொடர்புடைய விடயங்கள் | 01 |
| 13 | கொள்கைகள் தொடர்பான விடயங்கள் | 147 |
| 14 | பொதுவான விடயங்கள் | 102 |
| 15 | உயர்நீதிமன்றம், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் | 90 |
| | **மொத்தம்** | **591** |

*அட்டவணை இல. 01*

## தாபனப் பிரிவின் முன்னேற்றம் - (2016.01.01 - 2016.12.31)




*படம் 01*

### 2016.01.01- 2016.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் பற்றிய விபரங்கள்

| தொ. இல | அமைச்சு | அங்கீகரிக்கப்பட்ட ஆ.சே.தி |
|---|---|---|
| 1 | நிதி | 06 |
| 2 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 04 |
| 3 | கிராமிய பொருளதார அலுவல்கள் அமைச்சு | 02 |
| 4 | சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 09 |
| 5 | பெற்றோலிய வளத்துறை அபிவிருத்தி அமைச்சு | 01 |

| | | |
|---|---|---|
| 6 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 02 |
| 7 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 01 |
| 8 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 01 |
| 9 | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 01 |
| 10 | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சு | 01 |
| 11 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 01 |
| 12 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 01 |
| 13 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 04 |
| 14 | தேசிய கலந்துரையாடல் பற்றிய அமைச்சு | 01 |
| 15 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 05 |
| 16 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 03 |
| 17 | நீதி அமைச்சு | 07 |
| 18 | கல்வி அமைச்சு | 03 |
| 19 | உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 01 |
| 20 | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு | 01 |
| 21 | காணி அமைச்சு | 03 |
| 22 | விளையாட்டுத்தறை அமைச்சு | 01 |
| 23 | கமத்தொழில் அமைச்சு | 02 |
| 24 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 04 |
| 25 | ஆரம்ப கைத்தொழில் அமைச்சு | 01 |
| 26 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 03 |
| 27 | கணக்காய்வாளர் திணைக்களம் | 01 |
| 28 | அமைச்சரவை அலுவலகம் | 01 |
| 29 | பிரதமர் அலுவலகம் | 02 |
| 30 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 04 |
| 31 | நிதி ஆணைக்குழு | 01 |
| 32 | அரசாங்க சேவை ஆணைக்குழு | 01 |
| | **மொத்தம்** | **79** |

அட்டவணை இல 02

**2016 ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புகள் (02)**

1. இலங்கை நூலகர் சேவை பிரமாணக் குறிப்பு
2. நீர்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு

**2016 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள் (04)**

1. 01/2016 - ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரித்தல் பற்றிய வழிகாட்டல் கோவையின் பிரிவு 7.2.5 ஐ திருத்துதல்.

2. 02/2016 - நியமிப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக ஏற்படும் தாமதங்களை தவிர்த்தல்
3. 03/2016 - வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணம் வழங்குதல்.
4. 01/2016(1) - ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரித்தல் பற்றிய வழிகாட்டல் கோவையின் பிரிவு 7.2.5 ஐ திருத்துதல்.

**<u>2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறை விதிகள் - (11)</u>**

1. மதுவரி திணைக்களத்தின் RS – 1 சேவை வகுதிக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
2. மதுவரி திணைக்களத்தின் RS – 2 சேவை வகுதிக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
3. இலங்கை தொழிற் கல்வி சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
4. இணைந்த சேவைகளுக்குரிய வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
5. இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
6. சுகாதார உதவி ஊழியர் பொது/கனிஷ்ட) பதவிகளுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
7. சுகாதார அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத வகை - 2 சேவை வகுதி விடுமுறை பொறுப்பாளி, உணவு மேற்பார்வையாளர், விடுதி எழுதுநர், கால்நடை ஊசி ஏற்றுநர், சுகாதார வழங்கல் உதவியாளர் மற்றும் கால்நடை பிரிவு கட்டுப்பாளர் (முற்றுகை) ஆகிய பதவிகளுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
8. சுகாதார அமைச்சின் ஆரம்ப பகுதியளவு தொழில்நுட்ப சேவை வகுதிகளுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
9. மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் திணைக்கள பதவிகளுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
10. மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் நிவாரண தோழி பதவிக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்
11. பிரதேச செயலாளர்களுக்கான வருடாந்த இடமாற்ற நடைமுறை விதிகள்

### 5.2 நியமனப் பிரிவு

இல 1955/22 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேடமான வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மற்றும் 1989/29 மற்றும் 2016.01.29, 1990/24 மற்றும் 2016.10.27, 1992/7 மற்றும் 2016.11.07 எனும் அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினது தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் நீங்கலாக) நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

#### 5.2.1 நியமனப் பிரிவின் செயற்பாடுகள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள்/ பதவி உயர்வுத் திட்டங்களின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் நிரந்தரமாக்கல், சேவையை முடிவுறுத்தல், முதலில் வகித்த பதவிக்கு மீள நியமித்தல், பதில் கடமை /கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல், சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக அடிப்படையில்), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவைக்கு / பதவிக்கு மீள நியமித்தல், ஓய்வுபெறச் செய்தல் (30/88 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விருப்புத் தெரிவின் / கட்டாய / மருத்துவக் காரணிகளின் அடிப்படையில்), ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல், சேவைப் பிரமாணக் குறிப்புகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

மேற்கூறப்பட்ட பணிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு / தீர்மானங்களுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும் செயற்படுதல்.

#### 5.2.2 நியமனப் பிரிவின் முன்னேற்றம் - (2016.01.01 -2016.12.31)

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓய்வு பெறுகை | 764 |
| 2. | நிரந்தரமாக்கல் | 2147 |
| 3. | ஆட்சேர்ப்பு | 2098 |
| 4. | ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல் | 789 |
| 5. | ஒப்பந்த நியமனங்கள் | 20 |
| 6. | வினைத்திறன் காண் தடை தொடர்பான தீர்மானங்கள் | 1181 |
| 7. | பதில் கடைமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | 990 |
| 8. | விடுவித்தல் | 125 |
| 9. | சேவையிலிருந்து விலகல் | 22 |
| 10. | உள்ளீர்ப்புச் செய்தல் | 89 |
| | **மொத்தம்** | **8225** |

அட்டவணை இல 03

## நியமனப் பிரிவின் முன்னேற்றம் - (2016.01.01 -2016.12.31)




படம் 02

| தொ.இல | ஓய்வு பெறுகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 117 |
| 2 | நீதி அமைச்சு | 03 |
| 3 | உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு | 02 |
| 4 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 02 |
| 5 | பாதுகாப்பு அமைச்சு | 01 |
| 6 | காணி அமைச்சு | 35 |
| 7 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 07 |
| 8 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 02 |
| 9 | கமத்தொழில் அமைச்சு | 41 |
| 10 | கிராமிய கைத்தொழில் அமைச்சு | 11 |
| 11 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 09 |
| 12 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 12 |
| 13 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 01 |
| 14 | கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 15 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 28 |
| 16 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 08 |

| | | |
|---|---|---|
| 17 | ஆரம்ப கைத்தொழில் அமைச்சு | 01 |
| 18 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 03 |
| 19 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 01 |
| 20 | நிதி அமைச்சு | 65 |
| 21 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 175 |
| 22 | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு | 02 |
| 23 | கணக்காய்வாளர் திணைக்களம் | 08 |
| 24 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 04 |
| 25 | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 22 |
| 26 | சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 203 |
| | **மொத்தம்** | **764** |

அட்டவணை இல 04

| தொ.இல | நிரந்தரமாக்கல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 02 |
| 2 | நீதி அமைச்சு | 44 |
| 3 | உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு | 04 |
| 4 | காணி அமைச்சு | 01 |
| 5 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 02 |
| 6 | கமத்தொழில் அமைச்சு | 07 |
| 7 | கிராமிய கைத்தொழில் அமைச்சு | 01 |
| 8 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 15 |
| 9 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 01 |
| 10 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 58 |
| 11 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 08 |
| 12 | நிதி அமைச்சு | 472 |
| 13 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 03 |
| 14 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 04 |
| 15 | இலங்கை கல்வி நிருவாக சேவை | 111 |
| 16 | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 92 |
| 17 | இலங்கை பொறியியல் சேவை | 47 |
| 18 | இலங்கை திட்டமிடல் சேவை | 05 |
| 19 | இலங்கை விவசாய சேவை | 52 |
| 20 | இலங்கை கணக்காளர் சேவை | 31 |
| 21 | இலங்கை நிருவாக சேவை | 192 |
| 22 | இலங்கை விஞ்ஞான சேவை | 25 |
| 23 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 11 |
| 24 | இலங்கை மருத்துவ சேவை | 959 |
| | **மொத்தம்** | **2147** |

அட்டவணை இல 05

| தொ.இல | ஆட்சேர்ப்பு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 01 |
| 2 | நீதி அமைச்சு | 23 |
| 3 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களை புலனாய்'வு செய்யும் ஆணைக்குழு | 15 |
| 4 | பாதுகாப்பு அமைச்சு | 01 |
| 5 | காணி அமைச்சு | 11 |
| 6 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 21 |
| 7 | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | 02 |
| 8 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 05 |
| 9 | கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 14 |
| 10 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 02 |
| 11 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 01 |
| 12 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 04 |
| 13 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 11 |
| 14 | நிதி அமைச்சு | 29 |
| 15 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 23 |
| 16 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 02 |
| 17 | கணக்காய்வாளர்' திணைக்களம் | 64 |
| 18 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 01 |
| 19 | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 110 |
| 20 | இலங்கை பொறியியலாளர் சேவை | 222 |
| 21 | இலங்கை கணக்காளர் சேவை | 144 |
| 22 | இலங்கை நில அளவைச் சேவை | 34 |
| 23 | இலங்கை விஞ்ஞான சேவை | 30 |
| 24 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 142 |
| 25 | இலங்கை மருத்துவ சேவை | 1185 |
| 26 | சுகாதாரம்,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 01 |
| | **மொத்தம்** | **2098** |

அட்டவணை இல 06

| தொ.இல | ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு அமர்த்தல் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதமர் அலுவலகம் | 01 |
| 2 | கல்வி அமைச்சு | 42 |
| 3 | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்துதல்களை புலனாய்'வு செய்யும் ஆணைக்குழு | 01 |
| 4 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 01 |
| 5 | காணி அமைச்சு | 36 |
| 6 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 04 |
| 7 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 09 |
| 8 | விளையாட்டுத்துறை அமைச்சு | 01 |
| 9 | கமத்தொழில் அமைச்சு | 06 |
| 10 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 15 |
| 11 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 01 |
| 12 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 02 |
| 13 | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | 02 |
| 14 | சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | 26 |
| 15 | போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 351 |
| 16 | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 18 |
| 17 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 18 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 78 |
| 19 | துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு | 01 |
| 20 | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு | 04 |
| 21 | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் | 03 |
| 22 | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 20 |
| 23 | சுகாதாரம்,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 166 |
| | **மொத்தம்** | **789** |

அட்டவணை இல 07

| தொ.இல | ஒப்பந்த நியமனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு | 02 |
| 2 | கமத்தொழில் அமைச்சு | 03 |
| 3 | பாராளுமன்ற புனரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 06 |
| 4 | நிதி அமைச்சு | 02 |
| 5 | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 01 |
| 6 | துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சு | 06 |
| | **மொத்தம்** | **20** |

அட்டவணை இல 08

| தொ.இல | வினைத்திறன் காண் தடை தாண்டல் தொடர்பான தீர்மானங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கல்வி அமைச்சு | 152 |
| 2 | நீதி அமைச்சு | 35 |
| 3 | உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு | 04 |
| 4 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 10 |
| 5 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 06 |
| 6 | கமத்தொழில் அமைச்சு | 02 |
| 7 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 02 |
| 8 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 21 |
| 9 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 03 |
| 10 | கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 12 |
| 11 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 11 |
| 12 | பாராளுமன்ற புனரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 49 |
| 13 | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு ,மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 18 |
| 14 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 02 |
| 15 | நிதி அமைச்சு | 15 |
| 16 | அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | 527 |
| 17 | கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் | 01 |
| 18 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 10 |
| 19 | இலங்கை கல்வி நிருவாக சேவை | 20 |
| 20 | இலங்கை பொறியியலாளர் சேவை | 02 |
| 21 | இலங்கை திட்டமிடல் சேவை | 11 |
| 22 | இலங்கை கணக்காளர் சேவை | 02 |
| 23 | இலங்கை நிர்வாக சேவை | 58 |
| 24 | இலங்கை நில அளவையாளர் சேவை | 39 |
| 25 | இலங்கை விஞ்ஞான சேவை | 08 |
| 26 | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 03 |
| 27 | சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு | 04 |
| 28 | சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 154 |
| | **மொத்தம்** | **1181** |

அட்டவணை இல 09

| தொ.இல | பதில் கடமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதமர் அலுவலகம் | 01 |
| 2 | மேலதிக செயலாளர் | 09 |
| 3 | கல்வி அமைச்சு | 13 |
| 4 | நீதி அமைச்சு | 01 |
| 5 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 04 |
| 6 | பாதுகாப்பு அமைச்சு | 06 |
| 7 | காணி அமைச்சு | 08 |
| 8 | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 01 |
| 9 | மலைநாட்டு புதிய கிராமங்கள் ,உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு | 01 |
| 10 | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு | 17 |
| 11 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 12 |
| 12 | விளையாட்டுத்துறை அமைச்சு | 06 |
| 13 | கமத்தொழில் அமைச்சு | 79 |
| 14 | கிராமிய கைத்தொழில் அமைச்சு | 14 |
| 15 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 25 |
| 16 | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | 15 |
| 17 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 07 |
| 18 | நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு | 01 |
| 19 | திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு | 26 |
